

திருவாசகம் - 51
அச்சோப் பதிகம் கதைவடிவில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# நிறைவுரை

1968ஆம் ஆண்டு எழுதத் தொடங்கிய நான் 2018ஆம் ஆண்டில் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறேன். ஐம்பதாம் ஆண்டில் திருமந்திரப் பாடல்கள் 3000இற்கும், திருவாசகப்பாடல்கள் 1303இற்கும் கதையெழுதி முடித்துள்ளேன். சிவன் சொல்லச்சொல்ல நான் எழுதினேன். எழுதாது ஓய்ந்து இருந்தால் அவர் தட்டி எழுப்பி எழுத வைத்தார். இது ஓர் அசுரசாதனை. இதை நிகழ்த்தியவர் சிவன். இருந்தபோதும் இதை விமர்சிப்பாரில்லை. விமர்சித்தால் பிழை சரி தெரியும். பேரோ புகழோ விருதோ எனக்குத் தேவையில்லை.அது அதிகாரிகளுக்கு இணக்கமானவர்களுக்கே சங்ககாலம் முதல் வழங்கப்பட்டு வருகிறது. பெரும்பாலும் பலர் வாசிக்கின்றனர். ஏனென்றால் எனது இணையத்தளத்தில் தினமும் வாசிப்போரின் தொகையும் மொத்தத் தொகையும் போடப்படுகின்றன. முகநூலில் விருப்பம் தெரிவித்தால் விரும்புவரின் பெயர், விலாசம் தெரியவரும். ஆனால் இணையத்தில் தெரியாது. சில தினங்களுக்கு முன் அதி உச்ச வாசிப்பு நிகழ்ந்தது. அது 253.பெரும்பான்மையானோர் எனது எழுத்து என்ன என்பதை அறிய முயல்கின்றனர். ஏனென்றால் கதைகள் முழுமையிலான கருத்தையும் விளக்கத்தையும் தத்துவத்தையும் விளக்குகின்றன. அதை வாசிப்போர் இலகுவில் புரிந்து கொள்வர். நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளேன். இவ்வருடம் இந்து கலாச்சாரஅமைச்சு எனது சிறுவர்களுக்கான பத்து நூல்களை வெளியிடுகிறது. இது ஒரு பெரும் அறுவடை என்றே சொல்ல வேண்டும். இவ்வளவு நூல்களை இதுவரை யாரும் வெளியிடவில்லை.

இந்து தத்துவங்களையும் பழந்தமிழ் நூல்களையும் எளிமைப்படுத்தி உள்ளேன். சிறுவர்கள் புரிந்து படித்து முன்னேறலாம். சிவனின் அருள் முழுமையாக இருப்பதாலும் அவன் உதவி செய்வதாலுமே இவ்வளவு நூல்களையும் எழுத முடிந்தது. வள்ளுவருக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது எனக்கு இப்போது நடைபெறுகிறது. இன்று திருக்குறளுக்கும் வள்ளுவனுக்கும் உள்ள மதிப்புச் சிவனருளால் எனக்கும் வரும். வரச் சிவன் உதவுவான். அந்தச் சிவனின் விருப்பப்படி அடுத்த எழுதல் பணி தொடங்குவேன்.

கல்வியைப் பற்றியும் நான் அதிகமாக விமர்சிப்பதுண்டு. எனது நாவல்கள் கல்வியை முன்னேற்றுவது பற்றியும், அதில் நடைபெறும் பயங்கரமான ஊழல்களைப் பற்றியும் வெளிப்படுத்துவாக அமைந்தன. அது பல்துறை ஆர்வலருக்கு உதவும். நான் நூல்களுக்கு வெளியீட்டு விழா வைப்பதில்லை. காரணம் ஒரு சிலர் மட்டும் தான் வருவர். அவர்கள் வந்து கூடிக் கதைப்பர். பேச்சைக் கேளார். பேசுவோரும் நூல்களை அக்கறையாகப் படிப்பதில்லை வந்து ஏதேதோ பேசிவிட்டுச் செல்வர். மேடை அமைத்தல், விளம்பரம் செய்தல், பொன்னாடை போர்த்தல்,

எழுத்தாளர்களைப் புகழ்தல் யாவும் செய்ய இலட்சக்கணக்கில் செலவாகும். அது வீண் விரயமாகும். என்னைப் பொறுத்தவரை எனது நூல்களை அவதானமாக வாசித்து வெளியிட்டு வரும் இந்து சமய கலாசார அமைச்சின் பணிப்பாளர் திரு அருளானந்தம் உமா மகேஸ்வரனின் பணியைப் பாராட்டுகிறேன். சைவசமயத்திற்கும் தமிழுக்கும் யாரும் ஆற்றாத பணிகளை ஆற்றி வருகிறார். அது காலங்கடந்தும் ஏன் இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின்பும் பேசப்படும் கம்பர் இராமாயணத்தை எழுதச் சடையப்பர்களால் உதவியதுபோல எனது நூல்களைத் துணிந்து வெளியிடும் அவரை மனமாரப் பாராட்டுகிறேன். அவரது பணி சிவப்பணி. அதைச் சிவன் அங்கீகரித்து அவரது பணி தொடர உதவுவார். பதிப்பித்தல் துறையில் இதுவரை பதிப்பித்த பதிப்பாசிரியர்களை அவர் விஞ்சிவிடுவார். இலங்கையில் அதிகமான நூல்களைப் பதிப்பித்த பெருமை அவருக்குண்டாகும். அவர் அறநெறிப்பாடசாலைகளை மேம்படுத்தி வருகிறார். அவற்றின் தரம் இப்போது உயர்ந்துள்ளது. அவரது நாமம் ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தும் பேசப்படும். ஏனென்றால் அவர் பழந்தமிழ் நூல்களையும், சமயநூல்களையும் சிறுவர்களுக்காகப் பதிப்பித்து வெளியிடுகிறார். சிறுவர் கதைகளைச் சிறுவர்களைவிடப் பெரியவர்களே வாசித்து மகிழ்வர். அவரது முகாமைத்துவ உதவியாளர் திரு. கு. சுதாகரன் அவர்கள்மிகுந்த சுறுசுறுப்பும், சமயப்பற்றும், தமிழறிவும் உடையவர். அவர் திரு. அ. உமாமகேஸ்வரனுக்கு உதவியாகப் பதிப்புத்துறையில் சிறப்புடன் பணியாற்றுகிறார். அவரது வாழ்வும் வழம்பெற வாழ்த்துகின்றேன்.

அவரது எதிர்காலம் சிறக்க வாழ்த்துக்கள் அத்துடன் விமர்சிக்க விட்டாலும் எனது ஆக்கங்களை வாசிக்கும் இலட்சக்கணக்கான அன்பர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். தொடர்ந்து வாசியுங்கள். பலன் பெறுங்கள். சிவனது அருள் உங்களுக்கும் கிடைக்கட்டும். உங்களது வாழ்வும் மேம்படும்

திருவாசகக் கதைகளைக் கணணியில் பதித்து, படங்களையும் அமைத்துத்தந்த யாழ்ப்பாணம் கலைமகள் கணணியத்திற்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன்.

நன்றி

உ

சிவமயம்

# அச்சோப்பதிகம் கதைவடிவில்

## அனுபவவழி அறியாமை

## தில்லையில் அருளியது

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**

**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்**

**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட**

**அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 01**

"அன்று வாகீசன் சைவமுறைப்படி புனிதனாகச் சிவன் கோவிலுக்கு வந்திருந்தான். அவன் கதிரேசனைக் கண்டதும் மகிழ்வுடன் அருகில் வந்தான்; "மகனே நாமகள் அதி புத்திசாலி, அவளைத் திருப்பதிப்படுத்த முயற்சி செய். அவள் சிவனைத் தவிர வேறு எவரையும் நம்பாதவள். தனது தாய் தந்தையரை சிவசக்தியாக எண்ணுபவள். வேடங்களில் அவள் நம்பிக்கை கொள்ளாதவள். அப்படியானவளை விதி உன்னுடன் சேர்த்து வைத்துவிட்டது. விதி வலியது. அதன் ஆளுகைக்குட்பட்டது தான் மனித வாழ்வு. அதனால் வேடங்களைப் போட்டு ஏமாற்றலாம் என்று நினைக்காது உண்மையுள்ளவனாக மாறு. அவள் அதிபுத்திசாலியென்று உனக்குத் தெரியும். அவள் ஒரு சிவபக்தை. அதனால் சிவனும் அவனது அடியார்களும் அவளுக்கு எவ் வேளையிலும் உதவுபவள் என்பதை மறவாதே. அத்துடன் வாழ்க்கையை நாடகமாகவும் எண்ணாதே. அது ஆயிரங்காலத்துப்பயிர். வழிவழியாக உனது பரம்பரையைத் தொடர்ந்து வருவது. ஏமாற்றுதல் என்பது ஒரு சில நாட்களுக்கு உண்மையாகி இன்பத்தைத் தரும். ஆனால் அது வெளிப்பட்டால் அதனால் வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ள முடியாது. உனது வாழ்க்கை உன்னுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. அது பலருடன் சம்பந்தப்பட்டது. நான் உனக்குச் சார்பாக வந்த போதும் ஒழுக்கம் மிக்க நாமகளையே சார்ந்து நிற்பேன். நீ தவறிக்கூட ஏறுமாறாக நடந்தால் அதை நாமகளுக்கு தெரிவிக்கத் தயங்க மாட்டேன். நாமகள் ஒழுக்கம் மிக்க சிவன் அடியாள். அவள் துன்பப்படுவதை நான் விரும்பமாட்டேன். "சிவனைப்பற்றி அறியாத மூடர்களுடன் தொடர்பு கொள்ள எனக்கு விருப்பமில்லை. இருந்தும் அறியாமையால் தவறு செய்பவர்களை அந்த தவறை உணர்த்தி உய்விக்க வேண்டுமென்று நினைப்பதால்தான்

உனது வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தேன். அதை, உனக்கு சாதகமாகக் கொள்ளாதே. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “சிறுமையில் உழலும் நான் என்னை மீண்டும் பெருமையுள்ளவனாக மாற்றிக் கொள்ளல் வேண்டும். பக்தி கொள்ளலும் சிவனைச் சார்தலும் அதற்கேதுவாக அமையும். உள்ளத்தில் உள்ள ஐயங்கள் யாவும் அகற்றப்பட்டால் தான் உள்ளத்தில் சிவன் உறைவான். இது சைவசித்தாதந்தம் கூறும் தத்துவம். உனது மனதில் ஐயத்தை வைத்துக் கொண்டு சிவனைத் தேடுவது கோழி திருடியவன் கோழியை இழந்தவனோடு தேடுவதை ஒக்கும். அதனால் முத்திநெறியை அறியாத மூர்க்கரோடு உள்ள சகவாசத்தை அகற்று. குடிகாரரின் செயற்கையை விடு. நல்லவர்களோடு சேர். அதனால் சிவன் மகிழ்ந்து உன்னை நாமகளுடன் சேர்த்து வைப்பான்” என்றான் கதிரேசன்.

**நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்**

**சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்**

**குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்குனு**

**அறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே. 02**

“வாகீசா, பலரும் உலக வாழ்க்கைதான் இன்பமானது என்று நினைக்கின்றனர். ஆனால் இன்பமானவை தான் பெருந் துன்பங்களைத் தருகின்றன என்பதை யாரும் உணர்வதில்லை. உதாரணமாக நீ உனது நண்பர்களோடு சேர்ந்து குடிப்பது தான் இன்பமானது என்று நினைத்தாய். அது உன்னை எங்கே கொண்டு வந்து நிறுத்தியுள்ளதென்று பார்த்தாயா? உனக்குள்ள வசதி வாய்ப்புக்களுக்கு நீ எவ்வளவு மகிழ்வுடன் வாழ வேண்டியவன். மனிதர்களுள் நினைக்கும் இன்பப் பொருட்கள் யாவும் சில கணங்களுக்குத்தான் இன்பத்தைத் தரும். குடிப்பதால் சில நிமிடங்கள் இன்பமாக இருக்கலாம். இன்னொரு பெண்ணின் உறவால் சில கணம் மகிழலாம். பின் அதனால் எவ்வளவு துன்பம் என்று அதை அனுபவித்தவர்களைக் கேட்டுப்பார். விசேடமாக மகாலிங்கத்தைக் கேள். சிவனோடு கூடியிருப்பதும் அவனருளோடு தனது மனைவியோடு கூடி வாழ்வதும் தான் நிரந்தரமான இன்பம். மற்றவையெல்லாம் சிறு சிறு இன்பங்கள். நீரில் இருக்கும் குமிழிகள் போன்றவை. பரமனையும் அவனது அருளையும் சார்ந்திருப்பதே பெருநெறி. அதனால் வரும் இன்பங்கள் பெருகிக் கொண்டேயிருக்கும். அவன் நடராசாவாக அதாவது சகுனப் பிரமமாகவும், சிதம்பர ரகசியமான நிர்க்குணப் பிரமமாகவும் இருக்கிறான். அவனருளால் தான் உலகம் இயங்குகிறது என்று நினைப்பவன் அவனது அருளோடு மிகவும் மகிழ்வாக வாழ்வான். அவனது அருள்

இல்லாதவன் உன்னைப் போலத் துன்பங்களுடன் தான் வாழ்வான். நீ படித்தவன். அறிவுள்ளவன். அப்படியிருந்தும் கற்காத முரடனைப் போலலல்லவா வாழ்கிறாய். மனைவியின் விருப்பப்படி வாழ்வது அவமானமென்று நினைப்பவனின் வாழ்வு நரகம் தான். ஆண் பெண் என்று பால் வித்தியாசமே தவிர இரண்டும் உயிர்கள் தான். இதில் மேலானது கீழானது என்று எதுவும் இல்லை. தான் மேலானவன் என்று நினைக்கும் ஆணும், தான் மேலானவள் என்று நினைக்கும் பெண்ணும் வாழ்வின் ஒவ்வொரு கடடங்களிலும் துன்பங்களையே அனுபவிக்கின்றனர். அரச உத்தியோகம் பார்க்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரேயளவு வேதனம் தானே கிடைக்கிறது. இதை கற்ற நீ உணராமல் இருப்பது வேதனையாக உள்ளது. யாரும் யார் சொல்வதையும் கேட்பதில்லை. நேரத்திற்கேற்றவாறு தலையை ஆட்டுகின்றனர். இந்தப் போக்கு மாறும் வரை அவர்கள் உருப்படமாட்டார்கள்" என்றார் கதிரேசன்

**பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே**

**மையலுறக் கடவேனை மாளாமே கர்தருளித்**

**தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்**

**ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 03**

"வாகீசா, இன்பங்கள் முழுவதையும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் தான் மனிதனைக் கெடுக்கிறது. ஒன்றைப் பெறவேண்டும் என்று எண்ணி உழைக்கும் மனிதன் அதைப் பெற்றதும் இன்னொன்றை விரும்புகிறான். அதைப் பெற்றதும் வேறொன்றை விரும்புகிறான். அதனால் தான் துன்பங்கள் மேலிடுகின்றன. ஆசைகளைக் குறைத்தால் துன்பமில்லை. இது போதும் என்று நினைத்தால் அவா உண்டாகாது. ஆசை அவாவாக மாறி மனிதனைப் பேயாக்குகிறது. போதும் என்று நினைப்பது யோகம். இது மனிதனை உயர்வான நிலைக்குக் கொண்டு செல்கிறது. ஒரு நாயை எடுத்தால் அது அளவோடு தான் உண்ணும். அளவுக்கதிகமாக அமிர்தமாக இருந்தாலும் அது உண்ணாது. சிவன்கோவிலில் அன்னதானம் கொடுத்தால் தான் உண்டுவிட்டுத் தமது குடும்பத்தினருக்கும் வாங்கிச் செல்கின்றனர். பலர் இரவு உண்ணவும் வாங்கிச் செல்கின்றனர். இது போகம் எனப்படும் ஆசை. இது நீங்காதவரை மனதில் நிம்மதியிராது. நீ குடிப்பவன். குடிப்பதே தவறு. குடிக்கத் தொடங்கினால் அறிவு கெடும் வரை குடித்துவிட்டு வீதியில் புரள்வாய். இதை ஒரு ஒழுக்கமான பெண் சகிப்பாளா? பிள்ளை தந்தை கணவன் மனைவி என்ற உறவுகள் ஓர் அளவு மட்டும் தான் பொறுமையாக ஏற்கும். அசுரத்தனத்தை ஏற்குமா? சிவபக்தர்களுக்கு இவ்வுண்மை

விளங்கும். அதனால் அவர்கள் போகத்தைப் புறக்கணிக்கின்றனர். எந்த ஒரு செயலும் அளவுக்கு மிஞ்சினால் போகமாக மாறும். அது நிசத்தை உணராது. உனது மனைவி ஒழுக்கமானவள். பண்பானவள். சிவபக்தை. அதனால் எல்லோரையும் மதிப்பவள். அவளைப் பற்றி ஊரில் கேட்டால் கையெடுத்து வணங்கக்கூடிய தெய்வப் பெண் என்பர். ஆனால் அவள் உனக்கு அரக்கியாகத் தென்படுகிறாள். அது உன்னால் தான். நீ அரக்கனாக இருப்பதால் தான் தெய்வப் பெண்ணான அவள். அரக்கியாகத் தென்படுகிறாள். அதனால் மனதில் உள்ள அழுக்குகளை நீக்கி விட்டுப்பார். அவளின் உண்மையான தோற்றம் உனக்குப் புரியும். அதுவரை அவள் கெட்டவளாகத் தான் தெரிவாள்" என்றார் கதிரேசன்.

**மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை**

**எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்**

**கண்ணவெள்ளீ றயிவித்துத் தூய்நெறியே சரும்வண்ணம்**

**அண்ணல்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 04**

"வாகீசா, பூமியில் பிறப்பெடுப்பவன் அதன் பயனை அடைதல் வேண்டும். உயர்ந்த வாழ்வு, பிறர்க்கு உதவி செய்தல், தெய்வத்தரிசனம் என்பன முக்கியமானவை. அதற்காகத் தான் இறைவன் அறிவைப் படைத்தான். கல்வியைப் படைத்தான். பாடசாலைகளை உருவாக்கினான். ஆசிரியர்களைப் படைத்தான். இதைக் கற்றவர்கள் உணருதல் வேண்டும். பகுத்தறிவை இறைவன் மனிதர்களுக்கும் கொடுக்காது விட்டிருக்கலாம். அந்தப் பகுத்தறிவு தான் தன்னை மேம்படுத்த நினைக்கிறது. அதற்குக் கல்வி உதவுகிறது. ஆனால் இப்போது கற்றவர்கள் தமது கற்றல் திறமையால் மிக மிக மோசமாக நடந்து கொள்கின்றனர். தாம் வாழ்வதற்காகத் துணிந்து எதையும் செய்யத் தயாராகின்றனர். தெய்வத்தைப்பற்றியோ, ஒழுக்கமான வாழ்வைப் பற்றியோ அவர்கள் சிந்திப்பதில்லை. சிந்தித்தால் அவர்கள் தெய்வத்தை இகழமாட்டார்கள். ஒழுக்கக் கேடாக வாழமாட்டார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "பூமியில் பிறப்பெடுத்து அதன் பயனாக நான் நன்மைகள் எதையும் பெறவில்லை. சலிப்படைந்து சாவதற்கு முயன்றேன். அப்போது நினைக்கமுடியாத அன்பைச் சிவன் என் மீது செலுத்தி என்னை ஆண்டருளினான். திருநீற்றைப் பூசு, நீ என்னருளைப் பெறுவாய் என்றருளினான். அது அரிய பேறாகும்" என்கிறார். நான் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு திருநீறு பூசினால் உலக வாழ்வை மறந்து சிவனுடன் ஐக்கியமாகி விடுவேன். திருநீறு புனிதத்தைத் தரும். தெய்வ அருளைக் பெருக்கும்.

உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் தரும். அதனால் நடக்கும் செயல்கள் நல்ல முறையில் நடக்கும். நீ எதற்காகத் திருநீற்றைப் பூசினாயோ தெரியவில்லை. அது ஏமாற்றாகவும் இருக்கலாம். ஆனால் அதைப் பூசிய பின் ஏமாற்ற முடியாது. சிவன் மனதை மாற்றி விடுவான். இது எனது அனுபவமாகும்'' என்றார் கதிரேசன்.

**பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு**

**நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்**

**உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்று**

**அஞ்சேல்என் றருளியவாறார்பெறுவார் அச்சோவே. 05**

''காமத்தை அழிப்பது நீறு. மகாலிங்கம் பெண் பித்துப்பிடித்தவன். அவனுக்கு எப்போதும் பெண்ணின் துணை தேவை. கலையரசி என்ற பெண் அவனை மயக்கித் தன் வசப்படுத்தி வைத்திருந்தாள். அவனால் அவளில்லாது வாழ முடியவில்லை. அதைத் தெரிந்து வைத்திருந்த அவள் அவனை ஆட்டிப் படைத்தாள். அவளது தொல்லைகளைத் தாங்க முடியாத மகாலிங்கம் அவளைப் பிரிய நினைத்தபோதும் அவனால் பிரிய முடியவில்லை. இது கர்மம் தனக்கேறிய நிலை. ஆனால் உனக்கு நாமகள் மீது ஆசையிருந்திருந்தால் நீ அவளை விட்டுப் பிரிந்திருக்கமாட்டாய். காமம் தான் உலகில் எல்லாத் துன்பங்களையும் கொடுப்பது. அதுபோல எல்லா இன்பங்களையும் கொடுப்பித்து அதை நீ உணரவில்லை. காமம் அதிகரித்தாலும் சிவனை நினைத்து நீறு பூசுதல் வேண்டும். காம உணர்வு ஏற்படாவிட்டாலும் சிவனை நினைத்து நீறு பூசுதல் வேண்டும். இன்று நீ நீறு பூசியமையால் நாமகள் மீது உனக்கு விருப்பம் உண்டாகியிருத்தல் வேண்டும். அப்படி உண்டாகாவிட்டால் நீ நீறு பூசி ஏமாற்றுகிறாய் என்றே நான் நினைப்பேன். நீ எம்மை ஏமாற்ற முடியாது. நீ உன்னைத் தான் ஏமாற்ற முடியும். உனது இச்செயலை நான் நம்பவில்லை. செயலில் காட்டினால் தான் நம்புவேன். இறைவனின் அன்பு நினைக்க முடியாதது. அது அவனை நினைக்க நினைக்கப் பெருகிக் கொண்டே போகும். மாணிக்கவாசகரைத் திருநீறு பூசித் தன்னோடு சேரும்படி இறைவன் கூறினானாம். அது ஓர் அரிய செயல். திருநீறு பூசுபவர்களைச் சிவன் விரும்புவான். அவர்களுக்கு உதவி செய்வான். பின் அவன் அவர்களைத் தன்னோடு சேர்த்துக் கொள்வான். நீ ஏமாற்றுவதற்காகத் திருநீற்றைப் பூசினாலும் இறைவன் அதைக் காலகதியில் ஏற்பான். அதனால் உனது மாற்றத்தை நான் விரும்புகிறேன். ஆனால் அதை நாமகள் நம்பவேண்டும்'' என்றார் கதிரேசன்.

**வெந்துவிழும் எடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்**

**கொந்துகுழல் கோல்வளையார் குலிமுலைமேல் வீழிவேனைப்**

**பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்து**

**அந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 06**

மிகுந்த கவலையுடன் வாகீசன் தனது நண்பனான நடராசாவிடம் வந்தான். அவன் நெற்றியில் திருநீறு பூசியிருப்பதைக் கண்ட நடராசா கொன்னான்; ‘‘வாகீசா திருநீற்றை விளையாட்டுப் பொருளாக எண்ணாதே. உனது மனம் மாறிச் சிவனை, உனது தெய்வமாக ஏற்ற பின் திருநீற்றைப் பூசினால் அதை நான் நம்புவேன். நீ இரண்டு தினங்களுக்கு முன்பும் மது அருந்தியுள்ளாய். நாமகளுடன் சேர்வதற்காக நடிக்காதே. பெரியவரான கதிரேசனுக்கு உன் மீது நம்பிக்கை இல்லை. நாமகள் உனது நடிப்பை நம்பி ஏமாறமாட்டாள். அதனால் தான் உனக்குத் திருந்தக் கால அவகாசம் தந்தாள். இந்த உடம்பு பொய்யானது. அதைப் பலரும் மெய் என்று நம்பி அதனைப் பெருக்குவதில் ஈடுபட்டுள்ளனா். இந்த உடல் யோகத்திற்கு உரியது. அதைப் போகப்பொருளாக நினைப்பவர்கள் தான் துன்பப்படுகின்றனர். உடம்பை மெய்யென்றும், அதனால் பெறும் இன்பங்களை அமிர்தமானதென்றும் கருதித் தான் வித்தியாவை விரும்பினேன். அவள் திருமணம் செய்தபின் தனது கணவனை விட்டு விட்டு இன்னொருவனுடன் செல்வதை என்னால் சகிக்க முடியவில்லை! என்னை எனது இறைவன் காப்பாற்றி என்னைப் போலியான வாழ்வில் இருந்து விடுவித்தான். சிவனின் மீது ஆசை கொள்வதை விடுத்து தன் மீது பற்றுக் கொள்ளவதையும் விடுத்துத் தன் மீது பற்றுக் கொள்ள வைத்தான். எனது குற்றங்களையெல்லாம் நீக்கி, எனது அறியாமையையும் நீக்கி அவன் தன்னோடு சேர்த்துக் கொண்டான்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது உண்மை. உலகம் போலியானது. அங்கு நடைபெறுவனவெல்லாம் மாயாகாரியங்கள். சிவனை வணங்கத் தொடங்கிய பின் எனது மனக்குழப்பங்கள், துன்பங்கள் யாவும் நீங்கிவிட்டன. துன்பங்களை இறைவனின் அருளால் தான் நீக்க முடியும். நீ குடும்பத்தன். உனது குடும்பம் செழிக்கவேண்டும். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்றும் அது சிவனின் சன்னிதானம் என்றும் ஞானிகள் கூறுவர். ஆனால் குடும்பத்தை நேசி. மனைவி மீது அன்பு கொள். அது அம்மை மீது அன்பு கொண்டமைக்குச் சமமாகும். உயிர்களை வருத்தி எவரும் மகிழ்வாக இருக்கமுடியாது. நாமகள் ஒழுக்கம் மிக்கவள். பெரும் சிவபக்தை. அவளுக்குத் துன்பம் செய்தால் சிவன் உன்னை மன்னிக்கமாட்டான். ஓயாது துன்புறுத்திக் கொண்டே இருப்பான். நீ காதலித்துத் திருமணம் செய்தவன். காதல்

என்றால் அன்பு செலுத்தல். சிவம் என்றால் அன்பு. அன்பை எதன் மீது செலுத்தினாலும் அது சிவனைச் சென்றடையும் என்று கேனோ உபநிடதம் கூறுகிறது. அதை நீ நம்பாவிட்டால் நீ வீட்டில் வளர்க்கும் நாய் மீது அன்பு செலுத்திப் பார். அது நீ செலுத்தும் அன்பை விட ஆயிரம் மடங்கு அன்பு உன்னில் செலுத்தும் . இது அன்பின் இயல்பு'' என்றான்.

**தையலார் ரமயலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்**

**பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி**

**உய்யும்நெறி காட்டுவித்திட் டோ ங்காரத் துட்பொருளை**

**ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 07**

''வாகீசா, அழகான பெண்களின் மையலில் அகப்பட இருந்த என்னைக் காப்பாற்றி இறைவன் என்னைத் தன் வசமாக்கினான். அவன் என்னைச் சிறுகச்சிறுகத் தன் வசமாக்கினான். பந்த பாசத்தின் தாழ்ப்பாளை உடைத்துத் தகர்த்தான். உய்யும் வழியை எனக்குக் காட்டினான். ஓங்கார தத்துவத்தை அவன் எனக்குரியதாக்கினான். இப்பேறு அரிய பேறு'' என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். பெண்கள் மீது கொள்ளும் மோகம் உயிரைக் கொல்லக்கூடியது. இல்லாவிட்டால் அணுஅணுவாகச் சித்திரவதை செய்யக்கூடியது. அதிலிருந்து மாணிக்கவாசகரைக் காப்பாற்றியவன் சிவன். ஆனால் நான் ஒரு பெண்ணின் மீது கொண்ட மோகத்தால் கூற்றவனைச் சந்திக்க விரும்பினேன். அதைச் சிவன் அறிந்து அருளியமையால் தான் இன்று நான் உலகின் மாய இன்பங்களைத் துறந்து அவன் மயமாக வாழ்கிறேன். இப்போ அவன் எனது காமக்குற்றங்களை அகற்றி மனதைத் தூய்மைப்படுத்திவிட்டான். சுத்தமான மனது இனி அசுத்தங்களை ஏற்காது. ஆனால் உனது நிலை அப்படியானதல்ல. நீ ஒரு சிவபக்தையை ஏமாற்றி அவளை வஞ்சித்துள்ளாய். இது மகாபாவம். இந்தப் பாவத்திற்கும் பரிகாரமில்லை. அவள் அழுதழுது சிவனிடம் முறையிட்டால் உன்னைச் சிவன் மிகக் கொடுமையாகத் தண்டிப்பான். இல்லறம் தான் நல்லறம். எம் போன்ற துறவிகளைக் காக்கும் அறம். சிவனை வணங்கி அவனது அருளைப் பெற்று நாமகளுடன் ஒன்று சேர்ந்து வாழ். அவள் காரைக்கால் அம்மையார் அல்லது திலகவதியாரைப் போல வாழ விரும்புகிறாள். அது சரியா தவறா என்று எனக்குத் தெரியாது. ஓர் ஒழுக்கமான சிவபக்தையை ஏமாற்றும் உன்னோடு உறவு வைப்பது சிவத் துரோகமாகும். அதனால் அவளுடன் சேர்ந்து வாழ். இல்லாவிட்டால் எனது தொடர்பை நீக்கு'' என்றான் நடராசா.

**சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்**

**காதலின்மிக் கணியிழையார் கல்வியிலே விழுவேனை**

**மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்**

**ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 08**

''வாகீசா, மனிதன் இறப்பு, பிறப்பு என்னும் பெருஞ்சுழியில் சிக்கித் தடுமாறித் துன்பப்பட்டிருக்கும் வேளையில் காமநோய்க்கு ஆளாகி இருப்பது மிகவும் ஆச்சரியமான செயலாகும். அத்தகைய இன்னலில் இருந்து என்னை விடுவித்தது பெரும் ஆச்சரியமான செயல்'' என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். மரணம் என்பது நிட்சயமானது. தவிர்த்துவிட முடியாதது. மரணம் இவ்வுலக வாழ்க்கை போலியானது என்பதை பறை அடித்துச் சொல்லியும் யாரும் அதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. சபாபதிப்பிள்ளைக்கு ஒரே ஒரு மகள். ஐந்து ஆண்கள். ஐவரும் வெளிநாடுகளில் உழைக்கின்றனர். அவர்கள் எல்லோரும் சேர்ந்து தங்கைக்கு வெகு ஆடம்பரமாகத் திருமனத்தைச் செய்து வைத்தனர். ஆறு மாதங்கள் கூடக் கழியவில்லை அவள் விபத்தில் இற்நதுவிட்டாள். அது பெரும் அதிர்ச்சியான துன்ப நிகழ்வு. அந்நிகழ்வு நடைபெற்றுச் சில நாட்களுள் அக் குடும்பம் அந்நிகழ்வை மறந்து ஆடம்பரமாக வாழ்கிறது. மரணம் என்பது எதிர்பாராதவேளை வரும். அதன் வரவை முன்கூட்டியே எதிர்வு கூற முடியாது. இராசதுரைக்கு நெஞ்சுவலி வந்து வைத்தியசாலை அனுமதிக்கப்பட்ட போது ஊரார் இராசதுரை இறந்து விட்டதாக அவரின் வீட்டில் கூடி அழுதனர். அது நடந்து இரண்டு வருடங்களாகிவிட்டது. இராசதுரை வாலிபனைப் போல திரிகிறார். அதைவிட சபாபதிப்பிள்ளையின மகளைத் திருமணம் செய்தவன் அவள் இறந்து மூன்று மாதம் கூடக் கழியாத நிலையில் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துவிட்டான். ''பெருந் துன்பங்களுக்கு ஆளாகியுள்ள நிலையிலும் மனிதன் காம வசப்படுகிறான்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அதனால் மனிதர்கள் தாம் வாழும் நாளே கடைசிநாள் என்று எண்ணி ஒழுக்கமாகவும், இறை சிந்தனையுடனும் வாழவேண்டும். வீணான சண்டைகள், சச்சரவுகள், பிரச்சினைகளை விட்டுவிட்டுக் குடும்பத்தவர்களுடனும், அயலவர்களுடனும், நண்பர்களுடனும் அன்புடன் வாழ வேண்டும். அதனால் நாமகளோடு சேர்ந்து வாழ். போட்டி, பொறாமையை விட்டு விடு, சிவனை நம்பு'' என்றான் நடராசா.

**செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை**

**மும்மைமலம் அறுவித்து முதலாள முதல்வன்தான்**

**நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த**

**அம்மையெனக் கருளிவா றார்பெறுவார் அச்சோவே. 09**

''நடா, என்னை யாரும் நம்ப மறுக்கின்றனர். நான் பட்ட துன்பங்கள் போதும். இனி நான் திருந்தி வாழ ஆசைப்படுகிறேன். எவ்வாறு சொன்னாலும் கதிரேசன் தாத்தாவும் நாமகளும் நம்ப மறுக்கின்றனர். நீயாவது நம்பு. மாணிக்கவாசக சுவாமிகள்; ''நான் உலகவாழ்வு என்னும் சிறுமையில் உழல்பவன். இவ்வாறு வாழவேண்டாம் என்று இறைவன் என்னைத் தடுத்து நல்வழியில் செல்ல வைத்தான். என்னிடத்தில் உள்ள குற்றங்களையும் குறைபாடுகளையும் நீக்கி என்னைத் தன்மயமாக்கினான். பரத்தில் நான் ஒன்றுபடும்படி செய்தான். அதிசயங்களில் இது பேரதிசயம்'' என்று கூறுகிறார். இறைவனை நிந்தித்ததால் தான் எனக்கு இந்நிலை ஏற்பட்டது. இறைவனை வணங்குவோர் துன்பப்பட்டாலும் பின் மகிழ்வடைகின்றனர். மக்கள் அவர்களுடன் மகிழ்வுடன் கதைக்கின்றனர். என்னைக் கண்டால் எல்லோரும் விலகிச் செல்கின்றனர். இது பெரும் கொடுமையாக இருக்கிறது. அதற்குக் காரணம் நான் தம்மையும், தமது பிள்ளைகளையும் கொடுத்து விடுவேன் என்ற பயம். அதை வாய்விட்டு எனக்குக் கேட்கும்படி சொல்கின்றனர். முன்பு கவலைப்படாத நான் இப்போது அதற்காகச் கவலைப்படுகிறேன். தனிமரமாக நிற்பதைப் போன்ற உணர்வு. பைத்தியம் பிடித்து விடுமோ என்று பயப்படுகிறேன். அதனால் தான் வேறு வழியின்றிச் சிவனை வணங்கத் தொடங்கினேன். இப்போது நிம்மதியும் மகிழ்வும் என் உள்ளத்தில் தோன்றியுள்ளது. சிறுமையில் உழன்ற நான் இறைவனை வணங்கத் தொடங்கிய பின்பு நான் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தேன். அது மிகப் பயங்கரமாக இருக்கிறது. அதனால் நான் முழுமையான சிவபக்தனாக மாறிவிட்டேன். அதை முதலில் நீ நம்பு. நீ நம்பினால் கதிரேசனும் நாமகளும் நம்புவர். அதை நினைத்துப் பார்த்தால் எனக்கே வியப்பாக இருக்கிறது. மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னவை அனைத்தும் உண்மையான வார்த்தைகள். அதனால் திருவாசகத்தைப் படிக்கிறேன். மனம் படிப்படியாகப் பண்பட்டு வருகிறது. எனது தந்தை இப்போ என்னை நம்ப ஆரம்பித்துள்ளார். இது நல்ல மாற்றம் என்று அம்மா சொல்கிறா. நினைத்துப் பார்த்தால் நாம் காணும் காட்சிகள், வாழும் வாழ்க்கை யாவும் பொய் என்று தோன்றுகிறது. இனி நான் கவலைப்படாது சிவனை வணங்குவேன். நாமகள் என்னை ஏற்கும்போது ஏற்கட்டும்'' என்றான் வாகீசன்.

அதைக் கேட்ட நடராசா சொன்னான்; "துன்பத்தின் எல்லையில் இருப்பவன் சிவனை முழுமையாக நம்புவான். இது எனது அனுபவம். நான் உன்னை நம்புகிறேன். நாமகளுடன் கதைக்கிறேன்" என்றான்.

நல்லது, அவளாக விரும்பி வந்து என்னை ஏற்கும்வரை நான் சிவனுக்குச் சேவை செய்வேன்" என்றான் வாகீசன்.

*திருச்சிற்றம்பலம்.*